தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உமகம சித்தார்த்தி ஆவணி,. புரட்டாசி, ஐப்பசி 1979 ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் நவம்பர்	மலர்
ருட		ரு சு எ

'வய' வும் 'மத' வும்

ஏ. ஆதித்தன்,
மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்.

தொல்காப்பியனார் உயிரியலின்கண் நூற்று இருபது உரிச்சொற்களுக்குப் பொருள் தருகின்றார். சொற்களுள் 'வய', 'மத' என்னும் இரு உரிச்சொற்களின் வடிவம் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வய வலியாகும் [தொல் : 366 - நச்சினார்க்கினியம்]

தொல்காப்பியனார் 'வய' என்பதனையே உரிச்சொல் வடிவமாகச் சுட்டுகின்றார். உரையாசிரியர்களும் இதற்கு இயைய சான்றுகள் தருகின்றனர் 'வலி' என்னும் பொருண்மையில் இலக்கியங்களில் 'வய' 'வயம்' என்னும் இருவடிவங்கள் கையாளப்பட்டுள்ளன. எனவே இவ்விரு வடிவங்களில் எது அடிப்படை வடிவம் என்பது ஆய்வுக்குரியதாக அமைகின்றது.

வய

வயச் சுரு [குறுந்தொகை, 230]

வய நாய் [அகநானூறு, 118]

வய மா [பழமொழி, 40 : 2]

வயமுரண் ஆனேறு [கைந்நிலை, 10 : 1]

வயம்

வயம் திகழ்பு [அகநானூறு, 93]

வையை வயமாக வை [பரிபாடல், 7 : 78]

சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் பெய ருக்கு முன்பாக, பெயரைச் சிறப்பித்து நிற்கும் பெயரடையாக 'வய' என்ற வடிவம் செயல்படுவதனைக் காணமுடிகின்றது. 'வயம்' என்ற வடிவமோ பெயராகச் செயல்படும் நிலையில் முழுமை யாக இத்தகு வடிவத்தில் காணப்படுகின்றது.

இலக்கிய வழக்காறுகளின் வாயிலாக 'வயம்' என்ற வடிவம் இன்னொரு பெயரைச் சிறப்பிக்கும் நிலையில்தான் புணர்ந்து 'வய' என்ற வடிவம் கிடைக்கப்பெற்றுள்ளது என்று கருத இடமுள்ளது. பெரும்பான்மையும் இவ்விடங்களிலெல்லாம் 'வய' பெயரைச் சிறப் பிக்கும் பெயரடையாகச் செயல்படுகின்றது. தொடரில் பெயராகச் செயல்படும் நிலையில் 'வயம்' என்ற முழுமையான வடிவத்தினைக் காணப்பெறுகின்றோம்.

எனவே 'வயம்' என்ற வடிவம் தான் புணர்ச்சி நிலையில் 'வய' எனத்தன் இறுதி மூக்கின் ஒலியாகிய 'ம' கரத்தை இழந்து நிற்கின் றது எனக் கருதலாம். தொல்காப்பியனாரும் 'வய' என்பதை மட்டுமே கருத்திற்கொண்டு இதனை அடிப்படை வடிவமாகச் சுட்டி யிருக்கலாம். இலக்கிய வழக்காற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்து பார்த்தால் 'வயம்' என்பதே உண்மையான உரிச்சொல் வடிவம் என்பது புலனாகின்றது.

மதவே மடனும் வலியுமாகும் [தொல்:377-நச்சினார்க்கினியம்]

மிகுதியும் வனப்பும் ஆகலும் உரித்தே [தொல்:378-நச்சினார்க் கினியம்]

தொல்காப்பியனார் 'மத' என்பதனையே உரிச்சொல் வடிவமாக சுட்டுகின்றார். உரையாசிரியர்களும் 'மத' என்னும் அமைப்பினைக் கொண்ட தொடர்களையே சான்றாகத் தருகின்றனர்.

'மடன்', 'வலி', 'மிகுதி', 'அழகு', என்னும் நால்வகைப் பொருண்மையிலும் இவ்வுரிச்சொல் இலக்கியங்களில் பயின்று வரு கின்றது.

மத மா [பதிற்றுப் பத்து, 43]

மதம் நன்று [சிறுபஞ்சமூலம், 17 : 2]

மதவலி முருக்கி [புறநானூறு, 80]

மதன் உடை நோன் தாள் [நற்றிணை, 8]

இன்னமும் இவ்வுரிச்சொல் 'யானையின் மதம்' என்ற பொருண்மையிலும் கையாளப்பட்டுள்ளமையினைக் காணமுடிகின்றது.

களிற்றின் மதம் நாறும் [கார் நாற்பது, 24 : 2]

சொல்லில் பிறக்கும் உயர்மதம் [நான்மணிக்கடிகை 7 : 2]

தொல்காப்பியனார் கூறும் பொருண்மையில் 'மத', 'மதம்', 'மதன்' என்னும் மூன்று வடிவத்தை மட்டுமே தொல்காப்பியனார் குறிக்கின்றார். எனவே ஈண்டும் எது அடிப்படை வடிவம் என்பது ஆய்வுக்குரியதாக அமைகின்றது.

இலக்கிய வழக்காற்றில் 'மத' என்னும் வடிவம் பெயரைச் சிறப்பித்துப் பெயரடையாகச் செயல்படுகின்றது. 'மதம்' என்னும் வடிவம் பெயராகச் செயல்படும் நிலையில் முழுமையாக இத்தகு வடிவத்தில் காணப்படுகின்றது. இதிலிருந்து 'மதம்' என்ற வடிவம் தான் புணர்ச்சி நிலையில் 'மத' எனத்தன் இறுதி மூக்கின ஒலியாகிய 'ம' கரத்தை இழந்து நிற்கின்றது என்பதனை அறிய முடிகின்றது.

'ம'கரம் 'ன'கரத்தோடு மயங்கி வருதல் இயல்பு (மகரத் தொடர் மொழி மயங்குதல் வரைந்த னகரத் தொடர்மொழி-தொல்: 82 - நச்சினார்க்கினியம்). இவ்வடிப்படையிலேதான் 'மதன்' என்ற வடிவம் கிடைக்கப்பெறுகின்றோம்.

ஈண்டும் தொல்காப்பியனார் புணர்ச்சி நிலையில் 'மதம்' என்னும் வடிவத்தின் மாற்றம் பெற்ற 'மத' என்னும் வடிவத்தையே அடிப்படை வடிவமாகச் சுட்டியிருக்கின்றார். இலக்கிய வழக்குகளின் வாயிலாக 'மதம்' என்பதனையே உண்மையான உரிச்சொல் வடிவம் என்று அறியமுடிகின்றது.

மேற்கூறப்பட்ட செய்திகளிலிருந்து 'வயம்', 'மதம்' என்பனவை தான் 'வய', 'மத' என்னும் இரு உரிச்சொற்களின் உண்மையான வடிவம் (அடிப்படை வடிவம்) எனக் கொள்ளலாம்.

*இக்கட்டுரை எழுத பல்லாற்றானும் உதவி புரிந்த என்னுடைய பேராசிரியர் டாக்டர் மோ. இசரயேல் அவர்களுக்கு நன்றி உரித்தாகுக.

குறிஞ்சிப் பாட்டு

K. சோமசுந்தரம், B. A., B. L., தஞ்சை.

[துணர் 53, மலர் 3-4, பக்கம் 42-ன் தொடர்ச்சி]

எல்லையற்ற தெய்வீக அருள் விளக்க இயல்பினால் நிகழப்படும் காதற் களவொழுக்கமும் அதன் வழியெய்தற்பெறும் கற்பு வாழ்க்கையும் இறைபால் சார்தற்குரிய அறிவு இன்ப அன்பினைப் பயக்கும் கருவிகளாய் மக்கட்கு அமைந்துள்ளதை விளங்கவைக்கக் கபிலர் ஐந்திணைகளுள் குறிஞ்சித்திணையினை முதன்மையாய பாடற்பொருளாகக் கொண்டு பாட்டிசைப்பாராயினர். மற்றும் குறிஞ்சியினை மட்டும் கூறினால் ஏனைய திணைகளின் இயல்புகள் யாவும் கூறாமலே புலப்படுமெனும் கருத்தினை மேற்கொண்டே குறிஞ்சிப் பாட்டினை இயற்றினர். இதனை ஏனைய நான்கும் குறிஞ்சியினை சிறப்பிக்க வந்த துணையான திணைகளென்பதும், நான்கு திணைகளிலும் குறிஞ்சி ஒழுக்கம் நிகழுமென்பதும் கபிலரது சீரிய கருத்தாகும். எனவே நடைபழகும் குழவிகளுக்கு நடைவண்டி பயன்படுமாறு போன்று, பிறமொழியாளர்க்கு தண்டமிழ் கவிதைநடை தப்பறவே எளிகில் அமைய, உள்ளத்து உணர்ச்சிகளுக்கு ஊட்டம் தரும் பேசுஞ் சொற்களைக்கொண்டு குறிஞ்சிப் பாட்டினைத் தெய்வம் தமிழ்த்தவ அறிவு விளக்கும் கருவூலமாகத் திகழவைத்தார்.

இயற்கைக் கிளவியில் அகத்திணைக்குரிய காட்சித் துறையினை மட்டும் குறிஞ்சிப்பாட்டில் ஆரிய அரசனுக்கு தமிழ் அறிவித்தற்கு கபிலர் காணவைத்து, கண்டிராததோர் ஞான அற்புதத்தை உன்னுமாறு செய்தார். Best teaching adopts the process that proceeds from the known to the unknown). அக்காட்சியின் அமைதியினைச் சற்று குறிஞ்சிப்பாட்டின் கருப்பொருள் மூலம் காண்குவம்.

தினைப்புனத்தில் கிளிமுதலாய பறவையினங்களை யோப்பி தினைக்கதிர்களைக் காவல் புரியும் இளம் பெண்ணும் அவளது தோழியும், மலையருவியில் நீராடிப் பாடி பன்மலர்களைப் பறித்து மாலையாகக் கட்டி தலையில் அணிந்துகொண்டு அசோக மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தார்கள். அதுபோது கட்டிளமை மிடுக்குடைய ஒரு ஆண்மகன், வேட்டை நாய்கள் சூழ, கையில் வில்லும் அம்பும் ஏந்தி மார்பகத்தே மாலையும் அணிகலனும் விளங்க வந்தான். வெறியுடைய நாய்களைக் கண்டு அஞ்சி ஓடமுற்பட்ட அப்பெண்களை ஆண்டகை அணுகி இன்மொழி கூறி அன்னார்க்கு ஊறுநேராதவாறு, உடன் வந்த நாய்களை அடக்குங்காலே, மதங்கொண்ட பிளிறு அங்கு

வா. அதனைக்கண்டு மேலும் அஞ்சி நடுங்கிய பெண்கள் இருவரும் இளைஞன் அருகில் ஒட்டி நின்றனர், அதுபோது கட்டிளம் காளை அம்பெய்தி பிளிற்றினைப் புறங்கொடுத்தோடும்படி செய்தான். பின்னர் அப்பெண்கள் மலைக்காட்டாற்றில் நீராடப் பாய்ந்த ஞான்று அன்னார் கால்தளர்ந்து ஆற்றோடு அடித்துச் சென்றதைக் கண்டு வீர ஆண்டகை விரைவில் அவர்களை மீட்டுக்கரையில் கொணர்ந்து தேற்றினன். தோழி கண்டு குறுநகை புரிய அவ்வாண்டகை பின்னர் பாட்டுடைத் தலைவியின் நெற்றியினை நீவி ஒருவருக்கொருவர் உள்ளம் வீழ்ந்து கொள்ளத் தழுவினன். அறத்தினைப் பற்றுக்கோடாகக் கொண்டு நிலைபெறும் இன்பத்தின் வெற்றியை உணர்த்த பாட்டுடைத் தலைவன், கடவுளைத் தொழுது வாழ்த்தி மனையற வாழ்வுக்குரிய விருந்தினை யோம்பி பின் எஞ்சியதை தலைவியோடு உண்ணுவது சீரிய அறமெனக் கூறி ''நின்னலம் நுகர்ந்து நின்னை என்றும் பிரியேன்' என உறுதி மொழிந்தான்.

கண்டு அகப்பாட்டு நெறியின் நுட்ப திட்பத்தினைக் கபிலர் புலனுக வைத்த மென்மை அறிதற்பாலது. இந்நிகழ்ச்சி, மா, பலா, முதலிய மரங்களும், மயிலினங்களும் நிறைந்த சோலையின்கண் ஓர் கற்பாறை மீதுள்ள சுனையருகில் நடந்ததாகக் கபிலர் கூறி, கற்பாறையை ஊராகவும், சுனையைத் தலைவன் குடியாகவும், மா, பலா ஆகியவற்றின் தேறலைத் தலைவனுகவும், தேறலை மாந்திய களிப்பால் தள்ளாடியாடும் மயிலைத் தலைவனோடு காதலின்பம் தழுவி நுகர்ந்த தலைவியாகவும். மயில் ஆடலாற்ருது தளர்ச்சியெய்திய நிலையினைத் தலைவி கருத்தழிந்த தன்மையாக உள்ளுறையுவமம் விளங்கும்படி கபிலர் களவொழுக்கத்தாற் பிறந்த பேரின்பத்தைப் புலனுக வைத்தார். The passionate embrace motif in sex symbolism reflects complete surrender of soul to God.

பழுமிளகு உக்க பாறை நெடுஞ்சுனை
முழுமுதற் கொக்கின் தீங்கனி உதிர்ந்தெனப்
புள் எறிபிரசமொடு ஈண்டிப் பலவின்
நீர்செத்து அயின்ற தோகைவியல் ஊர்ச்
சாறுகொள் ஆங்கண் விழவுக்களம் நந்தி
அரிக்கூட்டு இன்னியம் கறங்க ஆடும் மகள்
கயிறு ஊர் பாணியின் தளரும் சாரல்

(குறிஞ்சிப்பாட்டு, 188 - 194)

இவ்வுவமைக் காட்சியில் பேரின்ப உவகை சுரந்துள்ளதைக் கூர்ந்துணர்க. மற்றும் காதலன்பில் விழுங்கப்படும் தலைவனும் தலைவியும் அன்பால் ஒருவராகி ஈருடலும் ஒருயிரும் ஆகிருரென்பதைக் கபிலர் காட்டி அவர்கள் இன்பத்தில் திளைத்து ஒன்றிவாழ முற்பட இருவரிடை அன்பு பெருகிட அவ்விடத்தில் அறக்கடவுள் கால்கொள்ளும் வகையினையும் உணர்த்தியுள்ளார். அறக்கடவுளின் மெய்யருட் குணத்தை தலைவியால் கண்ட தலைவன், தலைவியை மணந்து கூடுந்தோறும் நவநவமாய் காதலின்பம் மீதூரப் பெறுதல் போன்று அளப்பறிய இறைவனது குணத்தை இடையீடின்றி காதலால் கசிந்து நினைந்து கன்னையு மறந்து உருகுவார், புதிய புதியதாய் பேரின்பம் பெற்று சித்தவிருத்தி ஒடுங்கி இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பர் என்பதைச் சுட்டிக்காட்டி, கபிலர் அன்புக்காதலின் இன்பத்துள்ளே பேரின்பச் சாயலைத் தெற்றென விளங்க வைத்தார். The highest point of love is reached when the human soul can love his God as a wife loves her husband) மற்றும் காதலன்பு உணர்ச்சியில் விளையும் தெய்வீகமாய பாத்தூண் உணர்வினையும் கபிலர் குறிப்பாகக் கூறி, பாத்தூண் வழி வந்தெய்தும் இறையருளின் இன்பநிலையினையும் தெளிவாக நிறுவியுள்ளார். இதனையே கபிலர் தமது காவிய ஓவியப் புலமை கொண்டு சொற்கடந்த தொன்றை ஆரிய அரசன் உன்னும்படி அறிவுவகையாலும் உணர்வுவகையாலும் ஆரிய அரசனுக்கு மென்மையாக ஊட்டி அன்னாரைத் தெளிவடையச் செய்த திறம் போற்றும் தகைத்தது.

தெய்வம் முன்னின்று கூட்ட பாட்டுடைத் தலைவனுக்கும் தலைவிக்கும் களிறு தந்த காரணத்தால், ஊழ்வினைத் துணைவழி நீள் தொடர்பு உண்டாயிற்று. தோழி வாயிலாக தலைவன் தலைவியை அழைத்து வருமாறு தோழியை வேண்டிக் கேட்க, அவளும் முதற்கண் மறுத்து பின்னர் வேண்டுகோட்கு இசைய தலைவியை யாவரும் அறியாவண்ணம் இரவுக் குறியிடத்துச் சேர்ப்பிக்க, களவொழுக்கம் சின்னாட்களாக நிகழப்பட்டு வந்தது. பின்னர் தலைவன் இரவில் வருவதால் ஏற்படும் இன்னல்களைத் தலைவி நினைந்து வருந்துவாள். தலைவியும் இரவில் வருவதால் ஏற்படும் கலக்கத்தையும், தனக்கு இடப்பட்டிருக்கும் காவலின் கடுமையினையும் நினைந்து பெரிதும் தயருறுவாள். களவுக்காதலில் நிரலாகப் பின்னி நிகழும் இத்தகைய நிகழ்ச்சிகளால் ஏற்படும் பிரிவினைப் பொறுத்து ஆற்றியிருக்கும் நிலையினையும், ஆற்றமுடியாது அரற்றும் நிலையினைப் பற்றியுள்ள மெய்ப்பாடுகளையும் கபிலர் சுவைபட உணர்த்தி இறுதியில் தலைவனுக்குத் தலைவியைத் திருமணம் செய்விக்கும் எண்ணத்தைத் தோழி செவிலித்தாய்க்கு எடுத்துரைத்து முடிக்குமாறு வகை செய்துள்ளதையும் விளக்கியுள்ளார்.

கண்டு காதலிருவரும் அன்புருவமுற்று பின்னர் அருளுருவம் தாங்கி, அதன்பின் இன்புருவமெய்தியது சற்றே உய்த்துணரற்பாலது: காதலன்பால் எவ்வாறு இல்லறம் செழிப்பதும், அருளறம் தழைப்பதும், பேரின்பம் பொலிவு எய்துவதும் ஆகியவற்றை கபிலர் குறிப்பாக விளக்கி, ஆண் பெண் காதல் தத்துவத்தையும், காதலின்பக் கலையினையும் ஆரிய அரசனுக்கு அறிவித்து, காதலிருவர் வாழ்வும் சுத்தான்ம உணர்வில் நிறைமுறையாக ஒன்றினால் அது தெய்வத்தன்மையுடன் பிறப்பு இறப்பு இல்லாப் பெருவாழ்வு பெறும் உண்மையினைப் புலனாக வைத்தார். பாட்டுடைத் தலைவனை ஆன்மாவாகவும், அருளைத் தலைவியாகவும் கபிலர் கருதி, ஆன்மா தனது உடல் என மயங்கி எவ்வாறு உடலைப் பற்றுதலையும், மற்றும் அது தனது உயிரென்று தெளிந்து எவ்வாறு அருளைப் பற்றுதலையும் தெளிய விளங்க வைத்தார். ஐம்மலத் தொடர்பைக் களைந்த ஆன்மா. சாத்திரம் முதலாய ஐந்து நிலைகளை வகுத்துக்கொண்டு தசகாரியத்தின் முடிபாகிய இறைபோகத்தினைத் துய்க்க அவாவுடையதாய், தத்துவங்களை விட்டொழிந்து துரியாதீதத்தில் தனிப்பட நிற்குங்காலை, அருளென்னும் இன்ப வடிவம், மாயா சம்பந்தமானவைகளைக் (தோழி) கைவிட்டு துரியாதீதத்தில் வந்து நிற்கவும் அதுபோது தெய்வம் கூட்ட அருளென்னும் தலைவியை ஆன்மா எனும் தலைவன் பேரின்பம் துய்க்கத் தலைப்படுவதைக் கபிலர் தமது குறிஞ்சிப் பாட்டில் ஒருவாறு பொதிந்து விளங்கும்படி திகழவைத்துள்ளார், இதன் வழி உயிர், இறைவனைக்கண்டு வியந்து பேரின்பம் துய்க்க இரண்டறக் கலத்தல் மூலம், இறையனுபவத் தன்மையை அடைந்து நிற்கும் பொற்பினைக் கபிலர் அற்புதமாய் மிளிர வைத்துள்ளார். இத்தகைய நுண்பொருளினை அறிந்த ஆரிய அரசன் தன் ஆன்மாவை இறைதழுவிக் கொண்டது போலவும், தான் மாறிப் பிறந்து புதுவாழ்வு பெற்றதாகவும் உணர்ந்து, இது அற்புதமோ, இறையருளோ என ஐயுறுமாறு அவனை அதிசயிக்குமாறு கபிலர் விட்டுவிட்டார். மற்றும், அறிவும், அன்பும் இன்பும் மனச்செம்மையோடு களிநடம் புரியும் இடத்தில் இறையின்ப அமைதியும் தழைத்து நிலவும் தமிழ்ச் சமய பண்பாட்டின் உண்மைத்திறனையும், தமிழ் நாகரீகத்தையும் கபிலர் ஆரிய அரசனுக்கு விளங்கும்படி ஒரோவழி நயம்படக் குறிப்பிட்டுள்ளது கண்டு கொள்ளப்படும்.

குறிஞ்சிப் பாட்டினில் பேரின்பத்தைத் தூண்டும் அழகுணர்ச்சியினையும் உண்மை இன்ப மலர்ச்சியினையும் தெய்வக்கலையறிவினையும் வளர்ச்சியெய்திட, கபிலர் ஆற்றொழுக்காக, தமிழ்ச் சொல்லிலே காதலமுதினை மெல்லவைத்து, ஏறக்குறைய 99 மலர்களை 35 அடிகளில் எதுகையிலும் மோனையிலும் விளங்குமாறு சிறப்பியல்போடு

அடுக்கடுக்காக எடுத்துக்கூறிய திறம் அப்பாட்டினைக் கவினுறச் செய்துள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் பாலை என்ற நிலங்கள் மலர்ப்பெயராய் அமைந்துள்ளமை நோக்கற்குரிபது. சிந்திக்கின் மலர்கள் தொன்று தொட்டு இறைமயமான மங்களகரமாய இன்பப் பொருளாகவும் தூயஅன்பின் சின்னமாகவும் பொலிவுடன் சமுதாய துறைகளுள்ளும், சமயத்துறைகளுள்ளும், காதற்றுறைகளுள்ளும் மக்கள் உணர்ச்சிகளுக்குள்ளும் தண்மையுடன் மருவி, காதல்தத்துவத்தின் உட்பொருளினையும் காதலின் ஒளியினையும் பரிவுடன் இன்றளவும் எடுத்துக்காட்டி விளங்குபவன. மலர்கள் தம்மிடமுள்ள மணம் தேன், இனிமை, ஒளி முதலாயவற்றை பெண்களுக்கு அழகூட்டும் வண்ணம் அளித்ததோடமையாது அவர்களாக வயங்கி, அவர்களது பண்பாட்டு வாழ்க்கையினை நெறிப்படுத்தும் வளம் வாய்ந்துள்ளவை

பாட்டுடைய காதலிருவரது மணம் மலர்ந்து மணப்பதை பல வண்ணத்து மணமலர்கள் மூலம் கபிலர் காட்டி, காதலும் அம்மலர்களைப்போன்று இயற்கையின் அற்புதங்களில் ஒன்றெனத் தெளிவு படுத்தியுள்ளார். மற்றும் மலர்களின் அழகினையும், மணத்தினையும் தூய்மையினையும் உயர்வினையும் கபிலர், காதலுறவில் காட்டி பேரின்பப் பண்பின் நுட்பத்தைத் திட்பமுற தெளியவைத்தார். அம் மலர்கள், உருவகையாலும் சிறப்பியல்பாலும் வேறுவேருக காணப் படினும் அவற்றில் தெய்வமணங்கமழும் இறைவன் ஒருவன் அமர்ந்து கலத்துள்ளான் என்ற முக்கியத்துவத்தையும் கபிலர் கற்பித்துள்ளது கருதற்பாலது படைப்புத் தத்துவத்தின் சிற்பக்கலை போன்று அற்புதமாய்ப் பலவகையாக உருவெடுத்திருக்கும் மலர்களைப் பல் வகை திறங்களுடன் பாட்டிற் கலந்து உறவாடும்படி கபிலர் அமைத்து, மலர்களின் அழகே உண்மை இன்பமெனக் காட்டி அழகின் நிறைவே இறைவன் எனக்கொண்டார். அன்பின் மூலம் அவற்றை அறிவுக்கண்ணுக்குப் புலனுக காதல் பக்தியினை வளர்த்து பரிபூரணதத்துவ நெறிக்காட்சியினைத் தெய்வமணங்கமழுமாறு யக்குவமாகக் கபிலர் தெளியவைத்துள்ளமை அறிந்துணர்ந்து இன்புறற் பாலது.

இத்தகைய பன்மலர்களின் வாசத்தாலும், மௌன வாசகத்தாலும் ஆத்ம படைப்பு நடைபெறுகிறதென்பதும், அப்பன்மலர்களில், வரம்பிலா ஆற்றலையுடைய இறைவனைக் காணும்பேறு இறைவனது அருளை இயல்பாய் பெற்றமைக்கு அறிகுறியா மென்பதும் கபிலரது கருத்து. இறைவன் மறைகளுக்கு புலனுகாதவாறு ''வளத்துள் மலர்களிலே வைகுவான்'' எனக் கம்பர் கூறியது ஈண்டு நினைக்கற்பாலது. மற்றும் கபிலர் பன்மலர்களிடையே,

இன்பப் பேற்றால் மக்களது மனம் பூத்த மலரை வைத்து அதன் ஏற்றம் புலனாதமாறு, இறை பெரிதும் விரும்பும் மனம் பூத்த அம்மலரின் அழகை எவ்வாறெல்லாம் நுகரவேண்டுமென்பதை ஆரிய அரசருக்கு வியக்கும் வண்ணம் அருளியது பாராட்டற்பாலது.

மலர்கள் காதலுணர்ச்சிக்கொத்த தத்துவத்தைக் கொண்டுள்ளதாயினும், அவை, அரும்பு, முகை முதலாய நிலைகளில் இறைவனது இடைவிடாத பேரியக்கத்தின் வெளிப்பாடுகளாக வயங்குவதைக் கண்ட கபிலர் ஆங்கு ஆனந்த மயமாய இறை தத்துவம் இயல்பாய் எங்கும் நிறைந்து செயல்படுகிற மாட்சியினை உணர்ந்தார். உணர்ந்த வழி, அவர் காதலுணர்ச்சியினைவிட பாத்தூண் உணர்ச்சி தெய்வீகமானதென்பதைப் புலப்படுத்த காதலரது இல்லற மலரின் நறுமணமாக இருப்பது விருந்தோம்பல் எனச்சுட்டிக் காட்டுவாராயினர். இல்லறத்தோடு கூடிய விருந்தோம்பல் ஒப்பற்ற சீரிய பண்பென்றும், காதலரது கற்பொழுக்க வாழ்க்கை பூவாக மலர்ந்து அதன் நறுமணத்தையும் காதலர் நுகரவேண்டுமென்றும் விருந்தோம்பும் வேள்விப்பயன் மூலம் வாழ்க்கையின் ஆனந்த தத்துவத்தைப் பற்றி கபிலர் எடுத்துக்காட்டி, அத்தகுதிப் பாட்டால் அடையப் பெறும் மீண்டுவாரா பெருநெறி விளக்கத்தையும் பேரின்ப நிலையினையும் குறிப்பாக உய்த்துணர வைத்தார்.

பேரின்பமுற, விண்ணகம் எளிதே எய்துவதற்கு வழிகாட்டும் கபிலர் பெருமான், தமிழறிவால் விளையும் தவ ஆற்றலின் இயல்பின் வழி தானுணர்ந்த பேரின்ப உணர்ச்சியினை இழுமென் மொழியால் ஆரிய அரசனுக்கு விழுமியது பயக்கும் குறிஞ்சிப் பாட்டின் மூலம் தெளிய வைத்துள்ளார். விண்ணகம்புகுதற்கு உதவும் தமிழ்க்கலையினை ஒப்பிய சிறப்பான ஓர் மரபுண்மை பண்டு தொட்டே தமிழகத்தில் நிலவி இருந்ததாக சங்க இலக்கியங்களை சான்று பகரும். சங்ககாலத்துச் சான்றோர் செய்யுட்களிலே சாகாக் கலைக்குரிய பற்பல மேற்கோள்கள் காணப்படினும், ஈண்டு விரிவு பல்காமைப் பொருட்டு ஒருசிலவே காண்குவம். பாலைக்கௌதமனர் தன் இல்லறக் கிழத்தியருடன் விண்ணகம் புகுந்த செய்தியினை பதிற்றுப்பத்து மூன்றும் பத்தின் பதிகம் எடுத்துப் பகர்கின்றது. இச்செய்தியினைச் சிலப்பதிகாரத்து கட்டுரைக் காதை

வண்டமிழ் மறையோர்க்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேற் சேரலற் காண்கென. [63 — 64]

வலியுறுத்துகின்றது. மேதினியில் இறவாத பெரு நலத்தின் இயலினை

தவஞ்செய் மாக்கடம் முடம் பிடாஅ
ததன் பயனெய்திய வளவை மான
வாறு [91 — 93]

என்ற பொருநராற்றுப் படைவரிகள் மொழிந்ததும் சற்றே உற்று அறியற்பாற்று.

எனவே இதுகாறுங் கூறியவற்றால் தமிழ் என்பது. பொய்யாய் போலியாய் மெல்லமெல்லப் போய்விடும் இன்பமில்லாது என்றும் நிலையாய் நின்று ஊட்டந்தரும் பேரின்பமென்பதும். அதனைக் கபிலர் ஆரிய அரசனுக்கு அறிவித்தற்பொருட்டு, துய்த்து எளிதே அனுபவிக்கப்படும் காதலின்பத்தின் வழி பேரின்பத்திற்கு உண்மை கூறவேண்டிய, குறிஞ்சிப்பாட்டில், காதலிருவரது இன்பத்தில் பேரின்ப நிலையை உணரவைத்து ஆரிய அரசரது மனத்தில் சாவாக் கலைக்குரிய தெய்வத் தோற்றம் பிறக்குமாறு வகை செய்தார். இத்தகையவாறு வகை செய்தாராயினும், பேரின்பத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தாகக் கொள்கையென, சமயஞானமும் மெய்யுணர்வும் கைவரப் பெற்ற கபிலர் ஆரிய அரசருக்கு அறிவுறுத்துவாராயினர். ஆத்ம அனுபவ ஞானத்தை ஆரிய அரசருக்கு விசயானுபவம் போல், சுருக்கமாகவும் விளக்கமாகவும் விஞ்ஞானபூர்வமாகவும் தெளிவுற மெய்பித்த பெருமை குறிஞ்சிக் கபிலரைக் கவர்ந்தவிந்தைக்குரிய ஒரு புதுமையாகும்.

பறம்பு மலையும், பாரீசுரமும்

பேராசிரியர் சி. கோவிந்தராசனார், கரந்தை.

பாண்டிய நாட்டின் வடக்கு எல்லையின் கிழக்குத் திருப்பம் குன்றுகள் தொடர்ந்துள்ள பகுதியாகவே அமைந்துள்ளது. எனவே இப்பகுதியினைக் கல்வெட்டுச் செய்திகள் குன்றுசூழ் நாடென்று குறிக்கின்றன. இக்குன்றுகளுள் தலைமையானதாக அமைந்துள்ள பெருங்குன்றினை, 'பிரான்மலை'' என்பர். தமிழகத்தில் எழுந்துள்ள குன்றுகளை மலை என்று சுட்டுதலும் வழக்கிலிருப்பதற்கேற்ப இப்பெருங்குன்றம் மலையென பெயர்பெற்றுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தின் மேற்கு எல்லையாக அமைந்துள்ள இக்குன்று, சங்ககால வரலாற்றுச் சின்னமாகவும், தெய்வத்தலமாகவும் அமைந்திருப்பதால், திருமலை என்றும் கல்வெட்டுகள் சுட்டுவதோடு, இம்மலையைச் சூழ்ந்துள்ள பகுதியினை திருமலை நாடென்றும் குறிக்கின்றன. இக்குன்றின் சிகரம் மேற்புறமாக வளைந்து நிற்பதால் இக்குன்றினைக் கொடுங்குன்றம் என்றும் இலக்கியங்கள் குறிக்கின்றன கி.பி ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவரான திருஞானசம்பந்தர் தமது பாடலில் இக்குன்றினையும் அதன் வளத்தினையும் சிறப்பாகக் குறித்துள்ளமையோடு, ''வானிற்பொலி வெய்தும் மழை மேகங்கிழித்தோடிக் கூனற் பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்'' ''மயில் புல்குதண் பெடையோடுடனாடும் வளர் சாரல் குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக் கொடுங்குன்றம்'' என்று புகழ்ந்துள்ளார். சம்பந்தர் சுட்டிய வளங்களில் பெரும்பான்மை இன்றளவும் இக்குன்றில் மாறாமலிருப்பது இக்குன்றிற் கமைந்த தனிச்சிறப்பாகும், இக்கொடுங்குன்றம், சிவனுறையும் தலங்களுள் ஒன்றாகவுமமைந்து, தேவாரப் பாடல்களும் பெற்றுத் திகழ்ந்தமையால், சேக்கிழார் தமது திருத்தொண்டர் புராணத்துள், ''கொன்றை நறுஞ் சடைமுடியார் மகிழ்ந்த திருக்கொடுங்குன்றம்'' என்று குறிப்பாராயினார் (சம்பந்தர் - பாடல் - 629) இக்குன்றினைத் தொடர்ந்து பல குன்றுகளும் சோலைகளும் அமைந்து காட்சிக்கு விருந்தாக விளங்குவதோடு. குன்றினைச் சூழ்ந்த அடிவாரம் முழுவதும் சோலைகளால் சூழப்பட்டிருப்பதும் அவற்றினிடையே கரிய குன்று வானுற ஓங்கி வளைந்து நிற்பதும், இயற்கையன்னை இட்ட எழிலோவியமாகவே திகழுகின்றது. மற்றும்,

பாரியின் பரம்புமலை :-

சங்ககால வள்ளல்களுள் தனிச்சிறப்புடன் விளங்கிய வேள்பாரி வாழ்ந்திருந்து ஆட்சிசெய்த குன்றும் இதுவேயாகும். புறநானூற்றில் இக்குன்று, ''பறம்புமலை'' என்றே குறிக்கப்பெறுகின்றது,

இம்மலையிலும், அதனைச் சூழ்ந்தும், வள்ளல் பாரியின் காலத்து அமைந்திருந்த மலைவளங்களாக இலக்கியங்கள் சுட்டும் இயற்கைக் காட்சிகளாகும், நறுஞ்சுனைகள், தண்பொழில்கள், பெருங்கானங்கள், ஆகியவற்றுடன், மயில், குயில், மான் போன்ற உயிரினங்களும் மலைத்தேன் அடைகளும், நிறைந்திருப்பதோடு, மலையில் அகட்டிடத்தும், சூழ்ந்த தடத்திடத்தும் பறம்பின் வளங்களும் சிறத்த தொன்றுகும் முல்லை, குல்லை ஆகிய மணமலர்க் கொடியினங்கள் காட்டுவளமாக இன்றும் மல்கிப் பெருகி நிற்கின்றன. மற்றும் அக்காலத்தில் ஒரு குறுநிலமன்னன், மலையின் மேல் தடத்தை அரணாகக் கொண்டு குறும்பமைத்து ஆட்சி நடத்தியதற்குரிய அறிகுறியான அகன்ற மேற்றடமும், அதில் ஆங்காங்கே கிடைக்கும் பழங்காலச் சின்னங்களும் நறுஞ்சுனைகளும் பாரியின் பறம்புமலை இதுவேயாகும் என்பதனை உறுதியாகக் கூறுதற்கமைந்த சான்றுகளாகும்.

பறம்பு சூழ் கொடுங்குன்றம் :-

இம்மலையின் சிறப்பினைச் சங்ககாலப் புலவர்கள் பாரியது பறம்பு, பேரிருங்குன்று, பெருப்பெயர் பறம்பு, வியன்மலை, நெடுவரை என்றெல்லாம் புகழ்ந்து கூறியுள்ளனர். பாரியாண்ட நாட்டினை ''தண்பறம்பு நன்னாடு'' என்றும் குறித்துள்ளனர். பறம்பு சூழ்ந்த மலையே பறம்புமலை என்று பெயர் பெற்றதோடு, அப்பறம்பும் பறம்புநாடு என்றே குறிக்கப்பட்டுள்ளது. இப்பறம்புநாடு பாரியின் ஆட்சிக்காலத்தில் முன்னூறு ஊர்களுடன் அமைந்திருந்ததனை ''முன்னூறூர்த்தே தண்பறம்பு நன்னாடு '' என்று கபிலர் கூறும் புறப்பாட்டுப் பகுதி உணர்த்துகின்றது (புறம் - 110) அன்று பாரியின் பறம்பு மலையாகவும், பறம்பு நாடாகவும் பெயர்பெற்றுவிளங்கின. தெய்வத்தலமாக விளங்கிய போது, திருமலையாகவும், திருமலை நாடாகவும் பெயர்பெற்றன. பின்னர், குன்றின் வளைந்த முகட்டைக் கொண்டு மக்கள் சுட்டிய கொடுங்குன்றம் என்ற பெயரும், குன்றுசூழ் நாடென்ற நாடும் பாண்டியர்காலக் கல்வெட்டுக்களால் குறிக்கப்படுகின்றன. கி.பி. பதினேழாம் நூற்றாண்டிலிருந்தே இம்மலை ''பிரான்மலை'' என்று பெயர் பெறுவதாயிற்றென்பதனை, நாயக்கர்காலக் கல்வெட்டொன்று குறிக்கின்றது.

குன்றகக் கோயில்கள் :

கி.பி.ஆறும் நூற்றாண்டளவில் கொடுங்குன்றமென பெயர்பெற்ற இக்குன்றின் தென்புறச் சாரலில், அடிவாரத்தோடு பொருந்திய நிலையில் அமைக்கப்பட்டுள்ள சிவன் கோயிலுக்குரிய இறைவன்

"கொடுங்குன்ற நாதர்" என்றே குறிக்கப்பட்டார். பின்னர் பாண்டியரின் ஆட்சிக் காலங்களில் வளர்ச்சியடைந்த இறைராகங்களும் மண்டபங்களும். குன்றின், தென்புறச் சிறகாகும் உயரிடங்களில் முறையே இரண்டடுக்குப் பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன. அடிவாரக் கோயிலாகும். கொடுங்குன்ற நாதர் கோயிலே பெருங் கோயிலாகும். அக்கோயிலினின்றும் மேலே செல்லுதற்கமைந்த படிகளின்வழியே செல்லின் நூறடி உயர அளவில், மலைத்தடத்தில் பைரவர் கோயிலும், விசுவநாதர் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளன இப்பகுதியின் வலப்புறத்திலிருந்து மேலும் மேலே செல்லும் படிகளின் வழியே செல்லின வலிய மதிலிற்கமைந்த பெருவாயில் தோன்றும். மரத்தாலான வலிய பெரிய வாயிற் கதவுகற்கமைந்த உலோகக் குமிழ்களில் அமைக்கப்பட்டுள்ள சிற்ப நுட்பங்கள் சிற்பியர்களால் நுண்ணிதின் உணரும் குறிப்பினைக் கொண்டனவாகும். இவ்வாயிலோடு தொடர்ந்த படிகளின் வழியே மேலே செல்லின், ஆங்கு மாறவர்மன் சுந்தரபாண்டியனின் படிமத்தோடும் அவன் பெயரோடும் விளங்கும் பெருமண்டபம் வசந்தமண்டபமாகவே திகழுகின்றது. இம்மண்டபத்தின் மேற்புறம் திருமகள் மண்டபம் என்று பெயர்பெற்றுள்ளது. இம்மண்டபத்தினின்றும் தொடரும் படிகளின் வழியே செல்லின் அங்கமைந்த அழகிய மண்டபத்தின் மேற்குப்பகுதி மலையின் நடுவிடத்தில் தனித்து நிற்கும் பெரும்பாறையோடு இணைந்து நிற்பதாக அமைந்துள்ளது. மண்டபத்தினுள் முகப்பிடும் அப்பெரும் பாறையில், குடையப்பட்டுள்ள இறையகத்தில், உமையோடு ஒன்றிய நிலையில் சிவபெருமானின் திருமேனியினை கருணை நிறைந்த அழகிய அமர்ந்த சிற்பமாக உளிவன்மையால் சிறபி உருவாக்கியுள்ளான். சிற்பத்திறன் கி. பி. பத்தாம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டியர் காலத்திற்குரியது. இப்பெருமானை 'நல்ல மங்கைப்பாகர்" என்று அங்குள்ள பாண்டியர் காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

வலியமதிலரண் :-

இவ்வாறாக, விசுவநாதர் கோயில், பைரவர் கோயில், இவற்றிற்குமேல் நிற்கும் நல்லமங்கைப்பாகர் குடைவரைக்கோயில் ஆகிய தெய்வத் தடங்கள் ஒருதொகுதியாக ஒன்றன்மேலொன்றாக எழுந்து நிற்க, அவற்றைச் சூழ்ந்துவரும் திருச்சுற்றிடமாக மலையின் வியப்புறத்தில் ஊடுருவியதும் ஏற்றமும் இறக்கமும் கொண்டதுமான நெடியமலைத்தடம் அமைந்துள்ளது. இத்திருசுற்றிடத்தைச் சூழ்ந்த நிலையில் மலையின் சிறகிடத்தினின்றும் வலியதாகவும் பெரிதாகவும் மதில் எழுப்பப்பட்டுள்ளது வியத்தகு காட்சியாகும்.

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இக் கோயிற் பகுதியினையே கோட்டையாக அமைத்து போர்க்கோலம் கொண்டிருந்த மருதுபாண்டியரின் பெருமுயற்சியால் இப்பெரிய மதில் அரணாகக் கட்டப்பட்டது என்பதை. வரலாறும், மதிற்சுற்களொன்றிலுள்ள கல்வெட்டும் குறிக்கின்றன. இங்குள்ள சுனைத்தடத்தின் வடகரையில் மருதுபாண்டியரின் போருக்குரிய ஆயுதங்களை உருவாக்கிய கொல்லரின் உலைக்களமும், ஆயுதக்கிடங்கும் அழிந்த நிலையில் உள்ளன.

கல்வெட்டுகள் :

இங்குள்ள கோயிற்பகுதிகளில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுகள் முப்பதிற்கும் மேலாகும். கி. பி. பதினோராம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பாண்டிய நாட்டினை ஆட்சி செய்த சோழமன்னர்களாலும், பாண்டிய மன்னர்களாலும், அரசியல் தலைவர்களாலும் கொடுங்குன்றமுடைய நாயனார்க்கும், நல்லமங்கைப் பாகற்கும் செய்தளிக்கப்பட்ட பல்வேறுபட்ட அறச்செயல்களையே இக்கல்வெட்டுகள் குறிக்கின்றன. கல்வெட்டுகள் தரும் செய்திகளையும் கோயிற்கட்டடக் கலையின் சிறப்பினையும், அவற்றில் அமைக்கப்பட்டுள்ள சிற்ப நுட்பத்தினையும் கூறின் பெருகுமாதலான், மேல் பறம்பிற்பாரி என்று பண்டைய இலக்கியங்கள் குறிக்கும் பாரிவள்ளலைப் பற்றிய செய்திகளோ சான்றுகளோ அங்குளதா என்பதைப்பற்றி மேலும் ஆய்தல் இன்றியமையாததொன்றாம்.

பாரீசுரம் :

அடிவாரத்திலுள்ள கொடுங்குன்றநாதர் பெருங்கோயிலுக்கும் மலையின் தென்புறச்சிறகின் மேலுள்ள குடவரைக்கோயிலாகும் நல்லமங்கைப் பாகர் கோயிலுக்கும் இடையே உயர்ந்துள்ள தடத்தில் அமைக்கப்பட்டுள்ள கோயில்களுள் ஒன்றாகும் விசுவநாதர் கோயிலின் கருவறை அடிப்படை வரிசைக்கற்களிலுள்ள கல்வெட்டுகள் வரலாறு தருவனவாகும். இக்கல்வெட்டுகள் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ளதால், இவற்றின் காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதி எனலாம்.

இக்கல்வெட்டுகள் தரும் அறச்செயல்கள், கொடுங்குன்றமுடைய நாயகர்க்கு, துவராபதி வேளார் என்னும் அரசியலதிகாரி, கோயிலுக்குரிய நாள் வழிபாட்டிற்குரிய வருவாய்களமைத்த

"நிவந்தமாக அளித்துள்ள ஊர்களில் ஒன்று "பாரீசுரம்'' என்று குறிக்கப்பட்டுள்ளது.

மூவேந்தரால் வஞ்சித்துக் கொல்லப்பட்ட பாரியின் பெயரால் அமைந்த பழமையான கோயிலுள்ள ஊரே பாரீசுரமாகும். நாகேசுவரம், படீசுவரம், இராமேசுவரம் என்ற ஊர்களின் பெயர்களைப் போலவே பாரீசுவரமும் பெயர் பெற்றுள்ளமை அறியத்தக்கதாகும் இவ்வூர் பறம்புமலையின் அடிவாரத்தில் தொடரும் சுரபி நாட்டிலமைந்த ஊர்களிலொன்றுகும். பாரிபட்ட இடத்தில் அக்காலமக்கள் ஆர்வமுடன் இட்ட நடுகல்லோ அன்றி நினைவுச்சின்னமோ காலப் போக்கில் கோயிலாக்கப்பட்டபோது ஊரின் பெயர் பாரீசுவரமாகியிருக்கக் கூடும். ஆய்வுசெய்யின் உண்மைப் புலனாகும்.

கல்வெட்டு :

1 ஸ்வஸ்திஸ்ரீ யாண்டு ௩ யி௪ வது நாள் ௨௱௨௰அ குல்வீரதாவளத்தில் எழுந்தருளியிருக்க நினைப்பு உடையார் திருக்கொடுங் குன்றமுடையனாயநாற்கு துவராபதிவேளார் கட்டின பூபால புரன்தரன் சன்திக்கு அமுதுப

2 டி சாத்துபடி உள்ளிட்ட நித்த நிமன்தங்களுக்கு உடலாகவிட்ட சுரபிநாட்டு திருக்காயகுடி பற்றில் கொற்றமங்கலமும் இரட்டு அறுனூற்றுவனெரிபற்றில் பாரீசுரமும் இக்குளங்களில் ஞன்கெல்லைக்குட்பட்ட ந

3 த்தமும் நன்செய் புன்செயும் குளமும் குளப்பரிப்பும் பல விருக்ஷங்களும் உள்பட பண்டுடையாரையும் பழங்காணி யாளரையும் தவுத்து முன்னுள் இவர் தேவதானமாகக் குடுத்த படியிலே அனைத்தாயங்களு

4 ம் தேவைகளும் உபாதிகளும் தவுத்து தேவதான இறையிலியாக தன்தோம் இப்படிக்கு சந்திராதித்தவற் செல்வதாகக் கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்க என்று திருவாய் மொழிந்தருளினபடிக்கு இ

5 வை வெண்ணியூ குடையான் சோமன் பழம்பதிக்கு ஞயகன் எழுத்து உ

அசையும் பொருளும்

டாக்டர் கு. மோகனராசு, எம். ஏ., பிஎச். டி.,
தமிழ் விரிவுரையாளர்
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005.

1 அசையும் அமைப்பும் :-

1 : 0 தொல்காப்பியம் கூறும் செய்யுள் உறுப்புகள் 34 (தொல். 1259) அவற்றுள் மூன்றாவது உறுப்பாக விளங்குவது அசை.

1 : 1 செய்யுளில் அசை என்பது (எழுத்தமைப்புகளின் அடிப்படையில்) ஓரெழுத்துத் தனித்து வருவது அல்லது எழுத்துக் களின் மிகச் சிறிய கூட்டமைப்பு

1 : 2 அசையைத் தொல்காப்பியம் பின்வருமாறு வகைப் படுத்துகிறது.



" குறிலே நெடிலே குறிலிணை குறினெடில்

ஒற்றொடு வருதலோடு மெய்ப்பட நாடி

நேரும் நிரையும் என்றிசின் பெயரே " (தொல். 1261)

" இருவகை உகரமொ டியைந்தவை வரினே

நேர்பும் நிரைபும் ஆகும் என்ப

குறிலிணை உகரம் அல்வழி யான " (தொல். 1262)

எனவரும் நூற்பாக்கள் இரண்டும் நான்கு வகை அசைகளின் எழுத்துக்களை விளக்குகின்றன.

1 : 2 : 1 மேற்சுட்டிய நான்குவகை அசைகளுக்குரிய எழுத்தமைப்புக்கள் ஒவ்வொன்றையும், உயிர் எழுத்தை முதலாக உடையவை என்றும் உயிர்மெய் எழுத்தை முதலாக உடையவை என்றும் இரண்டிரண்டாகவும் பிரிக்கலாம்.

1 : 2 : 2 நேர் நிரையசைகளின் இறுதியிலும் நேர்பு நிரைபு அசைகளின் இடையிலும் இருவேறு மெய்யெழுத்துகள் சேர்ந்து வருவதும் உண்டு.

1 ; 2 : 3 இவையேயன்றி, உயிரளபெடை, ஒற்றளபெடை, விட்டிசை முதலியனவும் அசைவகைகளில் கருதத்தக்கன,

2 அசையும் பொருளும் :

2 : 1 தொல்காப்பியம் கூறும் அசைப் பகுப்புகள் பொருள் நோக்குடையன எனவும் பொருள் நோக்கு அற்றன எனவும் இருவேறு முரண்பட்ட கருத்துகள் உள்ளன. இம்முரண்பாடே இவ்வாய்வின் அடிப்படை நோக்கம்.

2 : 2 முதற்கண் அசைக்கும் பொருளுக்கும் உள்ள தொடர்பினை அட்டவணை வழிக் காண்போம்.

அசை — பொருள் தொடர்பு

[குறுக்க விளங்கள் : (1) உ. அ. — உயிரளபெடை; (2) ‿உ — உயிர்க்குறில்; (3) ¯உ — உயிர் நெடில்; (4) ஒ — ஒற்று (5) கு — குறில்; (6) கு° — குற்றியலுகரம்; (7) நெ — நெடில்; (8) மெ — மெய்; (9) மெ1, மெ2 — இருவேறுபட்ட மெய்கள்; (10) ×மெ — சொல்லின் ஈற்றில் வருதல் இல்லாத மெய் (11) √மெ — சொல்லின் ஈற்றில் வரும் மெய்; (12) மு* — முற்றியலுகரம்

வரிசை எண்	அசை வகை	எழுத்தமைப்பு	சீரில் அசை அமையும் இட நிலை: முதல்	இடை	கடை	அசைக்குப் பொருள் உண்டு	அசைக்குப் பொருள் இல்லை	அசையளவிலான பொருளும் சீர் அளவிலான பொருளும்: ஒன்றுதல்	ஒன்றாமை
1.	நேர்								
1. 1.		கு							
1. 1. 1.		‿உ	√ (விட்* டிசை)	√ (உ.* அ.)	√ (உ.* அ.)	'அ ஆ' (நாலடி 9:3)	'உரனசைஇ' (குறள் 1236:1)	'அ ஆ' (நாலடி 9:3)	—
1. 1. 2,		மெ‿உ			√	'அகல்க' (சிலப். 7:22:2)	'குண்டசழி' (புறம் 14:5)	'அகல்க' (சிலப். 7:22:9)	—
1. 2.		குஒ							
1. 2. 1.		‿உமெ							
1. 2. 1. 1.		‿உ×மெ	√	√ (உ.* அ.)	√ (உ.* அ.)	—	'அத்தச்' (ஐங்.273:1)	—	—
1. 2. 1. 2.		‿உமெ	√	√ (உ.* அ.)	√ (உ.* அ.)	'உண்டுறை' (ஐங். 28:1)	—	'உண்டுறை' (ஐங். 28:1)	'என்பில்' (குறள் 77:1)
1. 2. 1. 3.		‿உமெ1மெ2	√				'உய்த்தல்' (குறள் 1287:1)	—	—
1. 2, 2.		மெ‿உமெ மெ‿உமெ	√	√	√	—	'அத்தச்' (ஐங் 273:1)	—	—

வரிசை எண்	அசை வகை	எழுத்து தமைப்பு	சீரில் அசை அமையும் இட நிலை முதல்	இடை	கடை	அசைக்குப் பொருள் உண்டு	அசைக்குப் பொருள் இல்லை	அசையளவிலான பொருளும் சீர் அளவிலான பொருளும் ஒன்றுதல்	ஒன்றாமை
1. 2. 2. 2.		◡√ மெஉமெ	√	√	√	'முள்ளி' (ஐங்.21:1)	'நாடன்' (ஐங்.261:2)	'கண்களவு' (குறள் 1092:1)	'கரப்பின்' (குறள் 1051:1)
1. 2. 2. 2		மெ உ மெ1மெ2	√	√	√	—	'துய்ப்பதூஉம்' (குறள்1005:1)	—	—
1. 3.	நெ								
1. 3. 1.		உ (மேற்கோடு)	—	√ (விட்டிசை)*	√ (விட்டிசை)*	'ஈயென' (புறம். 204:1) 'அ ஆ' (நாலடி. 9:3)	—	'ஆபயன்' (குறள். 560:1)	'ஆயும்' (குறள். 918:1)
1. 3. 2.		மெஉ (மேற்கோடு)	√	√	√	'நாடாமா' (குறள்.397:1)	'நாடாமா' (குறள். 397:1)	'குடிமை' (குறள். 608:1)	'அகவா' (கலி131:28)
1.									
1. 4.	நெஒ								
1. 4. 1.		உமெ (மேற்கோடு)							
1. 4. 1. 1.		× உமெ	√			—	'ஆக்கம்' (குறள். 463:1)	—	—
1. 4. 1. 2.		உமெ	√			'ஈன்றாள்' (குறள்.923:1)	—	'ஆண்மகன்' (நற்.94:2)	'ஆண்டை' (கலி.13:16)
1. 4. 1. 3.		உமெ1மெ2				—	'ஈர்ங்கை' (குறள். 1077:1)	—	—
1. 4. 2.		மெஉமெ (மேற்கோடு)							
1. 4. 2. 1.		—× மெஉமெ	√	√	√	—	'கடிதோர்ச்சி' (குறள்.562:1)	—	—

வரிசை எண்	அசை வகை	எழுத்தமைப்பு	சீரில் அசை அமையும் இட நிலை முதல்	இடை	கடை	அசைக்குப் பொருள் உண்டு	அசைக்குப் பொருள் இல்லை	அசையளவிலான பொருளும் சீர் அளவிலான பொருளும் ஒன்றுதல்	ஒன்றாமை
1.4.2.2.		—√ மெஉமெ	√	√	√	'கடுங்கோல்' (குறள்.570:1)	—	'காமநோய்' (குறள். 1159:1)	'கல்லாதார்' (குறள்.409)
1 4.2.3.		மெஉ ← மெ1மெ2	√	√	√	—	'காழ்த்த' (குறள் 879:2)	—	—
2.	நிரை								
2.1.		குகு							
2.1.1.		∪ ∪ உமெஉ	√	√ +(உ-அ)*	√ +(உ-அ)*	'அதுகொல்' (குறுந். 5:1)	'அயிரை' (குறுந். 178:1)	'அதுகொல்' (குறுந்.5:1)	'எருமையும்' (தொல். 1539:1)
		∪ மெஉ ← ∪ மெஉ	√	√	√	'கலிமழை' (ஐங்.264:1)	'அமரிய' (அகம்.5:1)	'கலிமழை' (ஐங்.264:1)	—
2 1.		குகுஒ							
2. 2. 1.		∪ உமெ ∪ உமெ							
2. 2. 1. 1.		∪ உமெ ∪ × உமெ	√			—	'ஒறுப்ப' (குறுந். 34:1)	—	—
2. 2. 1. 2.		∪ உமெ ∪ √ உமெ				'இமிழ்கடல்' (புறச். 19:)	'அசும்பின்' (அகம். 376:13)	'இமிழ் கடல்' (புறம்.19:)	'அடும் பவிழ்' (குறுந். 349:1)
2. 2. 1. 3.		∪ ∪ உமெஉ ← மெ1மெ2	√	√	√	—	'இகழ்ந் தெள்ளா' (குறள். 1057:1)	—	—

வரிசை எண்	அசைகை	எழுத்தமைப்பு	சீரில் அசை அமையும் இட நிலை முதல்	இடை	கடை	அசைக்குப் பொருள் உண்டு	அசைக்குப் பொருள் இல்லை	அசையளவிலான பொருளும் சீர் அளவிலான பொருளும் ஒன்றுதல்	ஒன்றாமை
2. 2. 2. 2.	◡ மெஉ ◡ மெஉமெ		√	√	√	'இமிழ் கடல்' (புறம். 19:1)	'வள்ளியம்' (குறள்.598)	'இமிழ் கடல்'	'அகத் திடும்' (தொல்.11;1)
2. 2. 2. 3.	◡ மெஉ ◡ மெஉ மெ1மெ2		√	√	√	—	'புள்சிமிழ்த்' (குறள்.274:2)	—	—
2. 3.	குறெ								
2. 3. 1.	◡ — உமெஉ		√	√ +(உ.* அ.)	√ +(உ.* அ.)	'உடைவளை' (புறம்.90;1)	'அளஉம்' (கலி.8:10)	'உடைவளை' (புறம்.90.1)	'அரைசர்' (நற். 291:3)
2. 3. 2.	◡ மெஉ — மெஉ		√	√	√	'அகன்மலை' (மலை. 205)	'அகப்படே என்'	'அகன் மலை' (மலை.205)	'அணங் குடை' (புறம். 52;1)
2. 4.	குநெள								
2. 4. 1.	◡ உமெ — உமெ								
2. 4. 1. 1.	◡ உமெ ◡ × உமெ		√			—	'உரைத் திசின்' (குறுந்.302:1)	—	—
2. 4. 1. 2.	◡ உமெ — √ உமெ		√			உழார்நிலம்	—	—	—
2. 4. 2.	◡ மெஉ — மெஉமெ								

வரிசை எண்	அசை வகை	எழுத்தமைப்பு	சீரில் அசை அமையும் இட நிலை: முதல்	இடை	கடை	அசைக்குப் பொருள் உண்டு	அசைக்குப் பொருள் இல்லை	அசையளவிலான பொருளும் சீர் அளவிலான பொருளும்: ஒன்றுதல்	ஒன்றாமை
2. 4. 2. 1.		மெஉ (˘) (˘ ×) மெஉமெ	✓	✓		—	'கடாத்த' (கலி.46:3)	—	—
2. 4. 2. 2.		மெஉ (˘) — ✓ மெஉமெ	✓	✓	✓	'கமழ்கடாம்' (கலி. 48:5)	'காட் சியோர்' (சிலப். 26:73)	'கமழ் கடாம்' (கலி. 48:5)	'பார்க் கலாம்'
2. 4. 2. 3.		மெஉ (˘) — மெஉ ← மெ1மெ2 ↩				—	'சார் பிலார்க் (குறள். 449:2)	—	—
3.	நேர்பு	நேர் கு*	✓	✓	✓	'அன்புதான்' (குறள். 983:1)			
3. 1.									
3. 1. 1.		நேர். மு*	✓	✓	✓	'பொய்க் காய்வு' (குறள்1246:2)			
3. 2.		நேர்.கு° ஒ	✓	✓	✓	—	'ஊற்றுக் கோல்' (குறள். 415:1)	—	—
3. 2. 1.		நேர்மு*ஒ	✓	✓	✓	—	'நாணுதளை' (அகப்.29:21)	—	—
4.	நிரைபு								
4. 1.		நிரை கு°	✓	✓	✓	'கடும்பகட்டு' (நற்.381:7)	—	—	—
4. 1. 1.		நிரை கு°ஒ	✓	✓	✓	—	'நெருப்புச் சினந்' (புறம்125:2)	—	—
4. 2.		நிரை.மு*	✓		✓	'கடவுமதி' (நற்.321:8)	—	—	—
4. 2. 1.		நிரை. மு*ஒ	✓	✓	✓	—	'கனவுக் கொல்' (கலி.90:21)	—	—

2. 2. 1. உயிரளபெடையில் வரும் உயிர்க்குறில், சீரின் ஈற்றில் தனியசையாக வரும் உயிர்மெய்க்குறில், சொல்லின் ஈற்றில் வருதல் இல்லாத மெய்யெழுத்துக்களையும் இருவேறு மெய்களின் இணைவையும் ஈற்றில் பெற்று வரும் அசைகள், சொல்லின் முதலின் வருதல் இல்லாத உயிர்மெய் நெடில்களைப்பெற்ற அசைகள், ஒற்றொடு தோன்றி நிற்கும் உயிரசைகள் (பேராசிரியரின் கருத்து வழி) ஆகியவற்றிற்கு அசையளவிலும் பொருள் இல்லை என்பதை அட்டவணைவழி அறிகிறோம்.

2. 2. 2. சொல்லின் ஈற்றில் வரும் மெய்யெழுத்துக்களைப் பெற்றுவரும் அசைகள், குறில் குறில் குறில் நெடில் இணைகள் சீரின் ஈற்றில் வரும் உயிர்மெய்க்குறில், சொல்லின் முதலில் வரத்தக்க உயிர்மெய் நெடில்கள் ஆகியவற்றிற்கு அசையளவில் பொருள் உண்மையும் இன்மையுமாகிய இருவேறு நிலைகள் காணப்படுகின்றன. (காண்க : அட்டவணை)

2. 2. 3. விட்டிசையில் வரும் உயிர்க்குறில், உயிர் நெடில், சீரின் முதலில் வரும் உயிர் நெடில், உரியசைகள் ஆகியவற்றிற்கு அசையளவில் பொருள் உண்டு என அறிகிறோம். (காண்க : அட்டவணை)

2. 2. 4. அசையளவில் பொருளுடைய அசைகளுள்ளும், அசை அளவிலான பொருள் சீர் (அல்லது சொல்) அளவிலான பொருளொடு ஒன்றுவனவும் உண்டு; ஒன்றாதனவும் உண்டு. (காண்க : அட்டவணை)

2. 2. 5. அதாவது அசைகளுள், அசையளவில் பொருள் அற்றனவும் உண்டு; பொருள் பெற்றனவும் உண்டு. பொருள் பெற்ற அசைகளுள்ளும், அவற்றின் அசையளவிலான பொருள் சீர் (அல்லது சொல்) அளவிலான பொருளொடு ஒன்றுவனவும் உண்டு. ஒன்றாதனவும் உண்டு.

2. 3. *சீர்* முதலில் குறில் தனித்து ஒர் அசையாக வருதல் இல்லை. அது ஒற்றொடு சேர்ந்து நேரசையாகி வரும்; குறில் அல்லது நெடிலொடு சேர்ந்து நிரையசையாகி வரும். இவ்வாறு சேர்ந்து வரும்போது, அசையளவில் பொருள் பெற்று வருவதும் உண்டு; பொருள் அற்று வருவதும் உண்டு. (காண்க அட்டவணை)

விட்டிசைக்கும்போது மட்டும் உயிர்க்குறில் அல்லது உயிர் மெய்க்குறில் தனி அசையாக வரும். இவ்வகையில் தனிக்குறிலுக்குப் பொருள் உண்டு.

விட்டிசைத்தல் அல்லாத இடத்து. ஒரு சீரின் முதல் எழுத்தாக அமையும் உயிர்க்குறிலை அல்லது உயிர்மெய்க்குறிலைத் தனியே பிரித்து, அதனை ஒரு தனியசையாகக் கொள்ளுதல் கூடாது.

" தனிக்குறில் முதலசை மொழிசிதைத் தாகாது " என்பது தொல்காப்பியம். (1264)

தொல்காப்பியம் எழுப்பும் இவ்வரையறை நிரை, நிரைபு அசைகளை முதலசைகளாகக் கொண்ட சீர்களில் எழுவது. நிரை அசைகளுள் பொருள் பெற்ற அசைகளும் உண்டு. பொருள் அற்ற அசைகளும் உண்டு. நிரைபு அசைகள் பொருள் உடையவை. ஆகவே, பெரும்பான்மை நோக்கியது இவ்வரையறை என்று கொள்ளலாம்.

'மொழி' என்பதற்கு எழுத்து அமைப்பு எனப்பொருள் கொள்வோமாயின், நிரை நிரைபு அசைகள் எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக இந்நூற்பா அமையும். இவ்வகையில், பொருள் கொண்டால் இந்நூற்பாவில் பொருள் நோக்கினும் எழுத்து அமைப்பு நோக்கே சிறப்பாகக் கருதப்படுகின்றது எனக் கொள்ளலாம்.

2. 1. 5. தொல்காப்பியம்,

" குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே" (தொல். 1267)

என மற்றொரு வரையறை தருகிறது. இந்நூற்பாவிற்குப் பேராசிரியர்,

" குற்றுகர முற்றுகரங்கள் ஒற்றொடு நிற்கவும் பெறும் அவ்வொற்றுத்
தோன்றிய ஒற்றாயின்......எனவே, அவை நிலைமொழி ஒற்றுடையவாயின்
நேர்பும் நிரைபும் ஆகா. வருமொழி வல்லெழுத்து மிகினே யாவதென்றவா

என விளக்கம் தந்து, 'சேற்றுக் கால்' (யா. வி. ப. 236), நாணுத் தளையாக' (அகம். 29:21) 'நெருப்புச்சினம், (புறம். 125:2) 'கனவுக்கொ ளீகண்டது' (கலி. 90:21) என்பவற்றைச் சான்று காட்டுகின்றார். பேராசிரியர் கொண்ட எழுத்தமைப்பு, (குறில்

தனித்த வருதல் அல்லாத) நேரசை அல்லது நிரையசை+குற்றிய லுகரம் அல்லது முற்றியலுகரம்+சொல்லின் ஈற்றில் வருதல் இல் லாத ஒற்றுகள் என்பதாகும். இவ்வமைப்பில், அசையளவில் பொருள் இல்லை எனலாம். மேற்சுட்டிய நூற்பாவிற்குப் பேராசிரி யர் கூறும் எழுத்தமைப்பு நிலையை திரு. ஆபிரகாம் அவர்களும் ஏற்றுக் கொள்கிறார், (தொல்காப்பிய யாப்பு, ப15)

இளம்பூரணர் தொல். 1267 ஆம் நூற்பாவிற்கு வேறு பொருள் கொள்கிறார். இருவகை உகரமும் ஒற்றொடு தோன்றித் தனியசை யாகி நிற்கவும் பெறும் என்பது அவர் கருத்து. அதாவது, 'வேண்டு' என்பதில 'டு' என்னும் குற்றியலுகரம் 'ம்' எனனும் மெய்யெழுத் தோடு தோன்றி 'டும' என்னும் தனியசை (குறில் ஒற்றொடு வரும் நேரசை) யாகி நிற்கவும் பெறும் என்பது அவர் விளக்கம். இவ்வகையில் வரும் தனியசைகள் பொருள் பெற்று வருவதும் உண்டு. பொருள அற்று வருதும் உண்டு.

2. 1. 6. ஒரு சீரில் இரு சொற்கள் வரும்போது வருமொழியி லுள்ள உகரத்தைப் பிரித்து நிலைமொழியொடு சேர்த்து நேர்பு நிரைபு அசைகள் கொள்ளுதல் கூடாது. (தொல். 1266:1).

எடுத்துக்காட்டு : வார் முரசு = வார் முரசு
நேர் நிரை
= வார்மு ரசு
நேர்பு நிரை

இங்குப் பொருள் நோக்கு உள்ளது எனக் கொள்ளலாம்.

2. 1. 6. 1. அதேபோன்று, ஒற்றுமைப்பட்ட சொல்லினைச் சிதைத்து நேர்பு நிரைபு என்றும கொள்ளுதல் கூடாது.

(தொல். 1266:1)

எடுத்துக்காட்டு :

அன்புடைமை = அன்பு+டை+மை
நேர்பு நேர் நேர்
= அன்+புடை+மை
நேர் நிரை நேர்

இங்கு முதலசைக்கு (அன்) அசையளவில் பொருள் இருப்பினும் அசைப்பிரிப்பு, பொருள் நோக்குடையதா என்பது ஐயப்பாடே.

2. 1. 7. ஒற்றளபெடையில் அளபெடுத்து வரும் ஒற்று, தனி அசை ஆகலும் உண்டு என்பதை,

"அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவை (1274) அடுத்துவரும்.

"ஒற்றள பெடுப்பினும் அற்றென மொழிப"

என்னும் நூற்பாவால் (1275) அறிய முடிகிறது.

எடுத்துக்காட்டு :

"கண்ண்" (மலை. 352)

இங்கு, "கண்ண்" என்னும் சீர் கண்+ண் (நேர் நேர்) எனப் பிரிந்து தேமாவாகிறது. இந்தச் சீரில் தனியசையாகிவரும் 'ண்' என்பதற்குப் பொருள் இல்லை,

2.1.8. பாக்கள் இசையொடு பொருந்தியவை; அந்தப் பாவின் மிகச் சிறிய கூறு எழுத்து; அந்த எழுத்து தனித்து வருவது அல்லது எழுத்துகளின் மிகச்சிறிய கூட்டமைப்பைப்பெற்று வருவது அசை. ஆகவே, அசை இசையொடு தொடர்புடையது.

"அசையும் சீரும் இசையொடு சேர்த்தி

வகுத்தனர் உணர்த்தலும் வல்லோர் ஆறே"

எனவரும் தொல்காப்பிய நூற்பா (1268) அசை இசையோடு தொடர்புடையது என்பதைக் குறிப்பிடுகிறது. "அசைந்திசைக் கோடலின் அசையே" என்பதும் கருதத்தக்கது. ஆகவே அசையில் வரும் ஒவ்வொரு எழுத்துக்கும் இசையளவில் ஓர் இடம் உண்டு எனலாம், அதாவது,

'அக்கிளை' என ஒரு சீர் வருமாயின். இச்சீரில் உள்ள 'க்' என்னும் எழுத்துக்கும் இசையளவில் ஓர் இடம் உண்டு; ஆகவே, இச்சீரின் முதலசையை 'அக்' என்னும் அளவில்தான் கொள்ள வேண்டுமேயொழிய, புணர்ச்சிக்கு முந்திய நிலையைக் (அ+கிளை) கருத்தில் கொண்டு, முதலசைக்குப் பொருள் உண்டு (| அக் | — | அ |) எனக் கொள்வது நேரியதாகத் தோன்றவில்லை

மேலும் நேர்: நிரை, நேர்பு, நிரைபு என்னும் நான்கு அசைகளும் எழுத்து அல்லது எழுத்துகளின் அமைப்பு நிலைகளை நோக்கியே வகை செய்யப்படுகின்றனஎன்பதும் ஆழ்ந்து கருதத்தக்கது.

3. முடிவு:-

3. 1. இதுவரை கூறியவற்றால் நாம் அறிவன :

1. அசை பொருள் பெற்று வருவதும் உண்டு; பொருள் அற்று வருவதும் உண்டு.

2. பொருள் பெற்று வரும் அசைகளுள்ளும், அவற்றிற்குரிய அசையளவிலான பொருள் சீர் (அல்லது சொல்) அளவிலான பொருளொடு ஒன்றுதலும் உண்டு; ஒன்றாமையும் உண்டு.

3. அசை இசையின் ஒரு கூறு; ஆகவே, அதில் வரும் ஒவ்வொரு எழுத்துக்கும் இசையளவில் ஓர் இடம் உண்டு.

4. எழுத்துகளின் அமைப்பு நிலைகளை நோக்கியே அசைகளுக்குப் பெயரிடப்பட்டுள்ளன, பொருள்நிலை நோக்கி அன்று.

3. 2. ஆகவே, அசைகள் பலவற்றிற்குப் பொருள் இருப்பது ஒரு சிறப்பாக வேண்டுமானால் கொள்ளலாம். ஆனால், எல்லா அசைகளுக்கும் பொருள் உண்டு என்றோ, அசை பொருள் நோக்கு உடையது என்றோ கொள்ள முடியாது.

கலைமகள் விழா

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

முற்பகல் நிகழ்ச்சி :-

திருவள்ளுவராண்டு 2010, புரட்டாசித் திங்கள் 14-ஆம் நாள் (30—9—79) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் கலைமகள் விழா கலைநிகழ்ச்சி சங்கத் தமிழ்ப்பெருமன்றத்தில் நிகழ்வுற்றது. இவ்வாண்டு குழந்தைகள் ஆண்டாக கொண்டாடப்படுவதால் கலை நிகழ்ச்சிகள் பெரும்பாலும் மாணவ மாணவியரின் நிகழ்ச்சிகளாக அமைந்திருந்தன.

கரந்தைத் தமிழ்ச்சங்க எழுத்தர் திரு. த. ம. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாட, கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் பேராசிரியர் திரு. பி. விருத்தாசலம் M. A., அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். மாணவர்களுக்கு உற்சாகமூட்டும் விதத்தில் சங்கத்தொடர்பாளர் திரு. ச. சுந்தரம் பி. ஏ., பி. எல். அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார்கள். கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் தலைவர் திரு. க. தமிழ்ச்செல்வன் விழாவிற்கு தலைமை ஏற்று 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்கள். உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி மாணவர் திரு. T. சரபோசி காளமேகப் புலவரைப் பற்றியும், திரு. செ. கார்த்திகேயன் ஒட்டக்கூத்தரைப் பற்றியும், மாணவி K. இராமலெட்சுமி கல்வியின் சிறப்பினைப் பற்றியும் உரையாற்றினார்கள். இறுதியாக கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் திரு. சா. பாலையா கம்பனின் கவிதை சிறப்புப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். அதன் பின்னர் குழந்தைகள் ஆண்டையொட்டி குழந்தைகள் இல்லம் மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சியும், இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி மாணவியரின் கலை நிகழ்ச்சியும் இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி மாணவரின் கலைநிகழ்ச்சியும், உமாமகேசுவர மேனிலைப்பள்ளி ஆசிரியர் திரு. D. D. செயச்சந்திரன், பி. எசி. பி. டி., அவர்களின் மெல்லிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன.

கரந்தைப் புலவர் கல்லூரிப் பேராசிரியர் திரு. இரா. குருநாதன், எம். ஏ., அவர்களின் நிகழ்ச்சி நடைபெற்றது. பின்னர் தொடக்கப் பள்ளித் தலைமையாசிரியர் புலவர் திரு. சிவ. பாலசுப்பிரமணியன் அவர்கள் நன்றி நவில சங்க வாழ்த்துடன் விழா இனிதே நடந்தேறியது.

பிற்பகல் நிகழ்ச்சி :-

மாலை 5 மணியளவில் கலைமகள் விழா பிற்பகல் நிகழ்ச்சி தமிழ்ப் பெருமன்றத்தில் தொடங்கப்பெற்றது.

கரந்தைத் தமிழ்ச்சங்க எழுத்தர் திரு. த. ம. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தமிழ்த்தாய்வாழ்த்துப் பாடினார்கள். கரந்தைப் புலவர் கல்லூரிதுணைமுதல்வர் பேராசிரியர் திரு. ச. பாலசுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். இவ்விழாவிற்குப் பேராசிரியர் மேஜர் திரு. அ. கிருட்டினமூர்த்தி எம். ஏ., பி. ஓ. எல் (ஆனர்சு)., பி. எல்., தலைமை தாங்கித் தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரனார் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பற்றியும், கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கும் தனக்கும் ஏற்பட்ட நாற்பத்தாறு ஆண்டு வரலாற்றைப்பற்றியும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

அதுபோது, பூண்டி புட்பம் கல்லூரித் துணைப்பேராசிரியர் திரு. உரு. இராசேந்திரன் எம். ஏ., அவர்கள் "பைந்தமிழ்த் தேர்ப்பாகன்" என்னும் பொருளில் அரியதோர் உரை நிகழ்த்தினார்கள்.

மாயூரம் ஏ. வி. சி. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் திரு. தி. வ. காந்திமதிநாதன், எம். ஏ., அவர்கள் "சிரிப்பு" என்னும் பொருளில் சங்க இலக்கியங்களிலிருந்து கவிமணி பாடல்கள் வரை எடுத்துக்காட்டி நகைச்சுவை தோன்றப் பேசினார்கள்.

கும்பகோணம் அரசினர் ஆண்கள் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் திரு. டாக்டர் எழில்முதல்வன் எம். ஏ., பி. எச்டி., அவர்கள் "புதுக்கவிதை" என்னும் பொருளில் தற்காலப் புதுக்கவிதைகள் பலவற்றை எடுத்துச் சொல்லி கற்பனை நயத்தை நயம்பட விளக்கினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின், உமாமகேசுவர மேனிலைப் பள்ளித் தமிழாசிரியர் திரு. மீனா. இராமதாசு, எம். ஏ., அவர்கள் நன்றி நவில சங்க வாழ்த்துடன் கலைமகள் விழா இனிது நிறைவெய்தியது.

வேண்டுகோள்

தமிழ்ப்பொழில் அச்சுக்கூலி, தாளின் கிரயம் முதலானச் செலவுகள் மிக உயர்ந்துள்ளமையான், பொழிலின் ஆண்டு கையொப்பத்தொகை துணர் ருட மலர்-க சித்தார்த்தி ஆண்டு சித்திரை முதல் ரூ. 8/- லிருந்து ரூ. 10/- ஆக உயர்த்தப்பெற்றுள்தென்பதனை பொழில் அன்பர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். அன்பர்கள் அவ்வுயர்வினை பொருட்படுத்தாது வழக்கம் போல் ஆதரவு நல்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்

பொழிற்றொண்டர்

கான் சாயபு சண்டை.

சி. கோ. தெய்வநாயகம், எம். ஏ.. எம். பில்.
துணைப்பேராசிரியர், கரந்தைப் புலவர் கல்லூரி

(துணர் 53, மலர் 3-4, பக்கம் 53-ன் தொடர்ச்சி)

09:12 கானிற்குத் தெரியும். வெள்ளையர்கள் தம்மை வெறுப்பர் என்று, மறைவாக தன் தனிப்படையினை வலுவாக்கும் முறையில், புதுக்கோட்டை, தஞ்சை அரசாட்சியிடமிருந்து வீரர்களைச் சேர்த்தான்.

அதுபோது கானிடம் 27560 படை வீரர்களும், 200 ஐரோப்பிய உயர் அதிகாரிகள், படை வீரர்கள் என்பாரும், 30 உயர் பிரெஞ்சு அதிகாரிகளும், 20 பீரங்கிகளும் குதிரைகளும், ஒரு வருடத்திற்குத் தேவையான உணவுக் கையிருப்பும் இருந்ததாக வெள்ளையர்கள் குறிப்பாகக் குறித்து வைத்துள்ளனர்.

இந்நிலையில்தான், கானுல் நிலைகுலைந்த பூலித்தேவன், தன் நண்பன் மாபூஸ்கானின் தம்பியான ஆற்காட்டு நவாப் முகம்மதலியிடம் தஞ்சமாக, அவனுக்குக் காப்பாளனுக, பொன்மலையில் சரணடைந்து வாழலானுன்.

09:13 சென்னையை மீட்டான் காண் :

தெற்கத்திய பாளையங்களோடு கான் சண்டை செய்து வரும் போது பிரெஞ்சுக்காரர்கள் 1758-ல் சென்னையை வெள்ளைக்காரர்களிடமிருந்து கைப்பற்றினர். சென்னையை மீட்கும் பொருட்டு கான் வரவேண்டியதாயிற்று. தெற்கே போரிட்டுக் கொண்டிருந்த அவன், நண்பன் காலியட்டுடன் சென்னை திரும்பி, பிரெஞ்சுக்காரர்களோடு போரிட்டு பரங்கிமலைக் கோட்டை முதலியவற்றை மீட்டு வெள்ளையர்க்குத் தந்தான் என்ருல் அவனது பெருவீரத்தையும், உலையா ஊக்கத்தினையும்' என்னென்று புகழ்வது : எனவேதான் அவனது தலைமையின்கீழ் ஆயிரக்கணக்கில் ஐரோப்பியரே போரிட்டு வந்தனர்.

09:14 மதுரை மன்னனுக :

மாபூஸ்கானை திருச்சிக்கு அனுப்பியவுடன் மதுரையினையும் சுற்றுப்புற பாளையங்களையும் தன்னுட்சிக்கு ஆட்படுத்த தாம் முன்னர் வேண்டியிருந்தவாறே படையுதவி செய்த லஹதாலிக்குப் பெரிய குளத்தை' ப்பரிசிலாகக் கொடுத்து, பிரெஞ்சுப்படையினரை

யும் மாண்ஷியர் டி மாதவ் தலைமையில் தன்னுடன் மதுரையில் இருத்திக்கொண்டான்.

''வருகையிலே கும்தானென்று வந்தான் — அந்த
மதுரைக்கு வந்தபின்பு ராசாவுமானுன் ''

எனப்பாடல் பகர்கிறது.

09:15 செங்கோலோச்சல்:

மதுரையில் நீதியினை சாமபேததானதண்ட முறைகளில் கான் நிலைப்படுத்தினுன். மதுரையில் எப்போதும் களவுத்தொல்லை கொடுத்த 'பிரான் மலை'க்கள்ளர்களைக் கான் ஒழித்தமையினை நூல்

''...............பாளையத்தை நடத்திச் — சென்று
சூழவே பிறமாலை நாட்டாரை வளைத்து
வில்லிலச்சுனன் போல — பார்த்த
விடமெல்லாம் பிணக்காடாய் வெட்டி இழுத்தெரிந்து''

எனக் கூறியதோடு அவன் அவர்களை முற்றிலும் அடக்கியமையை

''கானு வழிமீதில் பதிமூன்று வராகனை யெறிந்தான்
அதிலே ஈயெறும்பு மொய்க்காமலிருந்துதடா பணமும்
கரையானு மருகில் நெருங்காதே'' எனக்கூறி
''ஒருநாள் அறுத்த பிணமெல்லாம் — கானும்
ஒன்பதுநாள் வரைக்கு முலர்த்தியே போட்டு ''

அப்பிரு மலைக்கள்ளர்களின் ஆணவத்தையடக்கினுன், என்கிறது

அவன் நல்லாட்சி செய்தலையும், மக்கள் அச்சமற்று அவனுட்சியில் வாழ்ந்தமையும்

''இருகையிலும் பணமேந்திக்கொண்டு — எட்டி
விசைந்து வழி நடக்கவேயிழித்தரசி செய்தான்''

என்பன போன்ற தொடர்களால் சிறப்பிக்கிறது.

09:17 பாளையங்கள் பணிதல்:

கானுக்கடங்கிய பாளையங்களில் தலைவர்களாக, இரட்டப்ப

நாய்க்கன், கிரிசப்ப நாய்க்கன், வணங்கும் போது கட்டம்பொம்மனும் வந்து வணங்கியதாக நூல் கூறுகிறது. இக்கட்டபொம்மன் வீரபாண்டிய கட்டபொம்மனின் பாட்டனுவான்- களக்காட்டுர் வன்னியன், சாத்தூரு நாய்க்கன், சன்னப்பன். தலைவெட்டியம்மையன், கண்டன் அப்பாஜி மறவன் போன்ருேர் வணங்க, கானுத மலையாள அரசன் வரிசைகளைக் கொடுத்து நட்புரிமை கொண்ட நிலையில் ஏழரையாண்டுகள் மிக இன்பமாக கான் அரசாண்டான். இதனை

"இப்படி ஏழரைவருஷமிதிலிருந்து அரசு ஆண்டேன்"

எனும் கானின் வாய்மொழி உறுதியாக்குகிறது.

09:17 மறவர்களின் எதிர்ப்பு :-

பாளையங்கள் எல்லாம் பணிந்த போழ்தும் சிவகங்கைச்சேதுபதிகள் மட்டும் பணியாமல் இருந்தனர், அப்போது சிவகங்கைச் சீமையினை "முத்து வருக சேதுபதி" என்பார் ஆண்டுவந்தார். அவரது தளபதிகளாக தாண்டவராயன் பிள்ளை, தாமோதரம் பிள்ளை எனும் சகோதரர்கள் இருந்து வந்தனர். தாண்டவராயன் பிள்ளை திருப்பூவனக் கோட்டையிலிருந்தும் சீமை புரந்து வந்தான். இத் தாண்டவராயனே "மருது சகோதரர்களின்" தந்தையாவான். இவன் கானின் ஆற்றலை உணர்ந்து எதிர்க்கத்துணியாமல் உறவு கொண்டாட முனைந்து கானை 'மச்சினன்' முறை கொண்டாடி பல கால் கடிதமனுப்பி இறுதிவரையிலும் கான் விலக்களிக்காமல் போகவே, மாசாவினை நயப்படுத்தி அவளுக்கும், கானுக்கும், கானின் மகன் சுல்தானுக்கும் உரிய பொருள்களை அன்பளிப்பாக அளிக்கின்ருன், அளித்த அன்பளிப்புகளை கான் வெறுத்தொதுக்குகிருன். ஆனல் அவன் மனைவி மாசாவோ மறவர்களின் 'நயப்புகளுக்கு' இசைந்து, கானுக்கு

"மறவருடன் பகைத்த காலத்தில் — இந்த
மதுராபுரி மன்னுனக்குத் தக்காது சொன்னேன்......
வெள்ளி எதிராகப் போனாலும் அந்த
வெள்ளாழனோடு மட்டுமெதிர்க்காதே வேண்டாம்"

எனும் நயவுரைகளைக் கூறுகிருள். ஆனல் அரசியற்றிறனடங்கிய கான் அவளை ஆணவத்தோடு

"அடுப்பூதத் தெரியுமடி லவுண்டி — உனக்கு

ஆஸ்தான சங்கதிகள் தெரியுமோ பெண்ணே''

என்று மறுத்ததோடு, சினத்துடன்

'' உருவியே தங்கபாலாவை - கோபித்து
உறைவிட்டு மாசாமேலெறிந்திட்டானல்லோ
இருபது பொன் சகலாத்து மருந்து நல்ல
இளந்துடையில் மாசாவுக் காயங்களாச்சு''

09:19 கானின் நட்பு தமக்குக் கிடைக்காது என்பதனைத் திட்ட வட்டமாக உணர்ந்த மறவர்கள் கானுக்கு

''போரடத்துணிந்தியே நீ கானு — நல்ல
புலிக்குட்டியொரு வயணஞ் சொல்லுகிறேன் கேளு
திருப்பூவனங் கோட்டை கேட்பையேயானல் வடக்கே
திருச்சினப்பள்ளிக் கோட்டை சீராய் நடந்து......
பாட்சா நவாபுதன் பேட்டி நான் செய்து
லாட்டு மேலாடையு மழைத்து — நல்ல
நலமான நீர் நெருப்பையுமழைத்து
வாட்டமுடன் லம்பிலியைக் கூட்டி — கர்னல்
மாட்டியன் மேஜர்துரை ஜன்னலை யழைத்து
கிள்ளப் பிரட்டனைக் கூட்டி — நல்ல
கேமல் துறைமுசியால் பறங்கியை அழைத்து''

வரபோவதாகக் கூறி,

வண்டியூரில் கூடாரமடைத்து

ஐப்பசி மாதத்திற்குள் கானை புளிய மரச்சோலையில் 'தூக்கப்' போவதாக அச்சுறுத்துகின்றனர்.

கான் அசைந்தானில்லை. மறவர்கள் கானை ஒழிக்க செயற்படுகிறனர்,

10:00 மறவர்களுடன் வெள்ளைப்படை

கானின் தனியதிகாரத்தால் கொதிப்புற்றிருந்த ஆற்காட்டு

நவாப், தன்னிடம் படையுதவி வேண்டிவந்த மறவர்களை வரவேற்கின்றான். பிரெஸ்டன் என்பானின் தலைமையில் வெள்ளைப்படை மறவர்களுக்குத் துணையாக கானை அடக்கப் புறப்பட்டது. ஆனால் ஆட்டைக் கடித்து - மாட்டை கடித்து - மனிதனையும் கடிக்கும் இவ் வெள்ளைப்படை என்பதனை நன்குணர்ந்த மறவர்கள் நிலையினை சேதுபதி முத்துவடுகநாதரின்

''துலக்கனை நம்பலாமா அண்ணே — அந்த
துரோகி பறங்கனை நம்பவும் கூடாது''
''ஆர்க்காடு போனவர்களண்ணே — கொழுத்த
யானைவாயில் கொடுத்த கரும்பல்லோ மந்திரி''

எனும் வாய்மொழியாலும் திருச்சியில் மறவர்கள் செய்த சூழ்ச்சியினாலும் 'கான் சாயபு சண்டை' மக்களுக்கு உணர்த்துகின்றது.

10;01 படை உதவி செய்யும் நவாப், மானியமாக சிவகங்கையை

'' எனக்கு நலமான பாக்கு வெற்றிலை செலவுக்கு உனது
சிவகங்கைப் பேட்டைதனை யெனக்கு விட்டுத்
தரவேணும்'' என்கிறான்.

ஆனால் தாண்டவராயனோ

''சிவகங்கை பேட்டையுடைய வளப்பத்தினை''
''ஆடரவங் கோழி, கூடக்கிடையாதாக'' க்கூறி

நவாப்பே வெறுத்துவிடுமாறு செய்கிறான். இக்கூற்றினை உறுதியாக்க மறவர்கள் ஒரு சூழ்ச்சி செய்கின்றனர். நவாப்பின் உத்தரவின்றி பாளையத்தோடு திருச்சியில் நுழையும் மறவர்கள் அரிசிப் பொறியினை வாரி எடுக்கச் சொல்லி தம்படைகளுக்கு ரகசியமாகக் கட்டளையிடுகின்றனர். அந்த நிலையினைக்கண்ட 'நவாப்' மறவரின் நாடு 'மிக வறண்டது' எனுங்கருத்தினை உறுதியாகக் கொள்கின்றான். இதனை

''திடீரென்று கடைவீதி வருகையிலே.....
நெல்லரிசி வாருவார் சிலபேர் அங்கே
நேரிட்ட கடலைபொறி வாருவார் சிலபேர்''

இக்கொள்ளையினைத்தடுத்த நவாப்பிற்கு தாண்டவராயன்

''கரும்பு என் சீமையிலேயில்லை — சாய்பு
கடலைப்பொறியவலுண்டை கிடையாத தேசம்
நெல்லரிசி எங்கள் சீமையிலே இப்போ
என்ளளவுங் கிடையாது மம்முதலி துரையே''
''அரிசியைப் பார்க்க மனிதர் இவர்கள்
ஆசையாலோடியெடுத்திட்டார் துரையே''

எனக்கூறப் 'பூலித்தேவனின்' (தன்னிடம் சொன்ன) 'கோள்' செய்தியில் நம்பிக்கையிழக்கிருன் நவாப். பிறகு வெள்ளைப்படை மறவருடன் புறப்படுகின்றது.

10:02 வெள்ளைப்படை :

''பன்னிரண்டு பட்டாளத்தைக் கூட்டி — பிரட்டர்
பாளையங்கூட்டினர்'' அப்பாளையத்தில்
கர்னன் பீரங்கி பனிரெண்டு — தனது
கறுப்புச் சட்டைக்கார பட்டாளமெட்டு
மூவாயிரந்துருப்புக் குதிரை — சேர்ந்து
முன்னூறு வண்டியில் மருந்து குண்டுமேற்றி
ரேக்கலா முப்பதையுங் கூட்டி — அப்போ

நேரிட்ட சாராயப் பீப்பாய்களுமேற்றி, வருகிறது வெள்ளைப் படை. நாட்டு வளத்தை வெள்ளையன் கண்டால் ஆசையுறுவான் நாடுபிடிக்க முயல்வான் என்பதனை தாமோதரம் பிள்ளை கூறுகிருன். எனவே

''பகலெல்லாம் செடிக்குள்ளேயடிப்பேன் — ராவில்
பாலைதிலத்தை கூட்டுவேனென்று''

தாண்டவராயன் கூறி வெள்ளைப்பாளையத்தை காடுமேடு தழுவி அழைத்துச் செல்கிருன்.

10:03 பொன்மலை தாண்டிய இப்படை, ஆமூர், குடுமியா மலை, திருமையம், குருவிக் கொண்டான்பட்டி, பாகணிக்காடு, பனங்குடிக்காடு, மங்கலம் தாலுக்கா இவற்றின் வழியே திருப்பூவ ணக் கோட்டைக்குச் சென்றடைகின்றது.

11:00 துணை சரிந்தது :

கானை அடக்க கானின் வளர்ப்புத் தந்தையாக அவனை வளர்த்து அறிவு கொடுத்து, மதுரைக்கும் கமாண்டராக அனுப்பிய பிரெஸ்டனே கும்பினியாரால் அனுப்பப்பெறுகிறன். கான் தன் வளர்ப்புத் தந்தை தன்மீது படையெடுத்து வந்துள்ளமையைக் கேட்கின்றன். இதனைப் பாடல்

> "மதுரை வளர் கான்சாயபு நீலன் — பாதர்
> வயணமாயிது சேதி காதிலே கேட்டு
> தகப்பனாகிய பெரிய பிரட்டன் — குதிரை
> தளத்தோடு திருப்பூவனமிரங்கினு னென்று"

கேட்டதாகக் கூறுகிறது.

இந்நிலையில்தான் கானின் பிரெஞ்சு உதவித் தளபதி மான்சியர் டி மாதவ்வின் தம்பியை — கானின் துணைவனை கும்பினியார் தியாக துர்க்கத்தில் சிறைசெய்து கானிற்கு வெளியினின்றும் கிட்டிய படையுதவிகளைத் தடுத்து விடுகின்றனர்.

12:00 கான் சாகிபு சண்டை :

கானிற்கு நேரம் வந்து விட்டது. ஆம். புகழ்பெறுவதற்கு முதல் இந்திய சுதந்திர எழுச்சிக்கு அடிகோல சூழ்நிலை அமைந்து விட்டது. கலங்காத உள்ளம் படைத்த கான்சாகிபு வெள்ளையரை எதிர்த்துப் போராடிய நிகழ்ச்சிகளே இராமனாண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன ? என நினைக்கும் பாமர மக்களின் மனதில் கூட தங்கி அவர்கள் அவனுக்குக் 'கான்சாகிபு சண்டைப்' பாடலஞ்சலி செய்து வழிபடுதலைச் செய்தனர் என்றால் மிகையாகாது.

12:01 வழியிடைப்போர்கள் : திருப்பூவனப் போர் :

திருப்பூவனக்கோட்டை நோக்கி வந்த வெள்ளைப்படையினை இடைவழியிலேயே கான் குலைக்கின்றன். ஒரு முறை அல்ல இரு முறை அல்ல. நான்கைந்து முறைகள்.

மோதிகான் சாயபு, வெள்ளைக்காரன் என நூல் சுட்டும் மார்ச்செண்ட், செய்குந்தன், அனுமந்தன், போன்ற துணைவருடன் "முன்னூறு துருப்பு குதிரையோடு" புறப்பட்ட கான் !! ஆனிச்சிக்

கணவாயிலே'' தன் சேனைகளை ஒளித்து வைத்து, திருப்பூவனக் கோட்டைக்குள்ளே பிரட்டன் போகுமுன்னே கலக்க வேணுமென்று

நாழிகையில் திருப்பூவனக்குளக்கரை தாண்டி வயல் வழியாய் குதிரைதனை விட்டு திருப்பூவன ஆற்றுவழிநோக்கி வெள்ளைப்படையினைத் தான் ஒருவனாகவே முதலில்

''முதல் பாராக்காரனையும் வெட்டி — ஒரு
மூச்சுக்குள் பட்டாளத்துள்ளே விழுந்து
கத்திமுனை ரத்தங்கள் ஒழுக''

கலக்குகிறான்

அதனைக்கண்ட பிரெஸ்டன் மிக்க கோபமடைகிறான். அவன் கோப நிலையினையும், அவனது எதிர்ப்பினையும் பாடல்

''டொப்பி கழட்டியே கீழேயடித்து — பிரட்டன்
சுருக்காக முன்கைதனைக் கடித்த மாத்திரத்தில்
மூன்றணியாகப் பிரித்து — பட்டாளத்தை''

கான்மீது ஏவுவதாகக் குறிக்கிறது.

கானின் துணைக்கு அவனது படை வரவே கான்

''இரண்டு கையில் இரண்டு முகப்பட்டா''

கத்திகளைப்பிடித்து வெள்ளைப்படைகளை வீசித்தள்ளுகிறான். இரு கையிலும் கத்தியேந்திப் போரிடும் கானின் ஆற்றலைப் பாடல்,

''வீசினான் திசை மதுரை கானன் — அப்போ
விழுகிற சிப்பாய் தலைகள் சொல்லப் போகாது
கையற்று விழுகிறது சிலது — அங்கே
காலற்று விழுந்தபேர் சொல்லப் போகாது.........
வெள்ளரிக்காய் வீசினாப் போலே — பாதர்
வீசினான் சிப்பாய்களைப் பொல்லாத கானன்.

என்று சிறப்பிக்கிறது.

(தொடரும்)